RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22s820

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நாலடியார் காட்டும் இளமை நிலையாமை

த. லதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரிமலை, திருப்பத்தூர்-635853, தமிழ்நாடு, இந்தியா

# Impermanent Youthfulness Shown by Naaladiyar

D. Latha [a, *]

[a] Department of Tamil, Don Bosco College, Yelagiri Hills, Tirupattur-635853, Tamil Nadu, India

* Corresponding Author: lathadhanapal99@gmail.com

Received: 17-05-2021
Revised: 30-04-2022
Accepted: 06-05-2022
Published: 20-07-2022

Check for updates

## ABSTRACT

Youth is not permanent, but changeable. It can change from adolescence to adulthood. Some people make mistakes and make fun of old people, forgetting that they may be getting old. Some people think that they can enjoy their youth and become virtuous in old age. They did not know that not only the old fruit but also the raw fruit would fall even in a strong wind. Youth is always active. Youth can do anything on a whim. There is nothing we can do when our body is weakened and our beauty fades away. Therefore, we should start practising virtues at a young age. We have to get rid of the actions that our hearts desire to go on the evil path, and we should go in search of merit. This will benefit us. The Jain text Naaladiyar expounds on many moral concepts necessary for life, such as carnal pleasure. It recommends that renunciation be the most important virtue. Virtuous people who are free from guilt cannot become virtuous in old age. So, we'll go over this research to see if there's anything we can do to help the troubled youth. So, let us not delay the time so that we, the youth, can practise virtue later. So, the purpose of this study is to do charity now itself.

**Keywords:** Naaladiyar, Virtue, Youthfulness, Moral

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் நாம் வாழ வழிக்காட்டியாகும். சங்ககால இலக்கியங்கள் காலத்தினைக் காட்டும் கண்ணாடி ஆகும். இலக்கியங்களின் நோக்கம் நீதியை உரைப்பது. மனித வாழ்க்கையை செம்மைப்படுத்துவது. நீதியுரைப்பதில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்தான் சிறப்பிடம் பெறுகிறது.

சங்கம் மருவிய காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு சோழநாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்கள் ஆட்சி செய்ததாக கருதப்படுகிறது. இவர்கள் காலத்தில் தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு. தமிழ்க்கலைகள் வளர்ச்சிக் குன்றியது. எனவே தமிழக வரலாற்றிலேயே இக்காலத்தினை இருண்டகாலம் என்பர். இக்காலப் பகுதியில்தான் சில நூல்கள் தோன்றின. சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களுடன் நீதி நூல்களும் தோன்றின.

“நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகங்கோவை பழமொழி- மாமூலம்
இன்னிலை காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலையாம் கீழ்க்கணக்கு”

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது நாலடியார் (Sithamparanar sami, 2003). இது நாலடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. திருக்குறளைப் போன்றே வாழ்க்கைக்கு தேவையான அறம், பொரு ள், இன்பம் பற்றி எடுத்துரைக்கிறது.

பழகுத்தமிழ்ச் சொல்லருமை 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'2 நாலு என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும். அறம் 24 பொருள் 13 இன்பம் 3 உரைக்கும் நூலாகும். நானூறு வெண்பாக்கள் நாற்பது அதிகாரங்களையும் கொண்டது. இதற்கு நாலடி நானூறு வேளாண் வேதம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

வறுமை காரணமாகப் பாண்டிய நாட்டைத் தஞ்சமடைந்த எண்ணாயிரம் சமண முனிவர்கள் தங்கள் நாடு திரும்ப எண்ணியபோது பாண்டிய மன்னர்கள் அவர்களைப் பிரிய மனமின்றியிருந்ததால் தங்கள் தலையணைக்குக் கீழே ஆளுக்கொரு பாடல் எழுதி வைத்து விட்டு இரவோடு இரவாகச் சென்றுவிட்டனர் சேதி தெரிந்த பாண்டிய மன்னன் வெகுண்டு அவற்றை வைகையாற்றில் வீசி எறிந்தான். அப்படி எறிந்ததில் எண்ணாயிரம் பாடல்கள் அடித்துச் சென்றன. அதில் நானூறு பாடல்கள் மட்டும் எதிர் நோக்கிச் சென்றன.

## நிலையாமையின் பொருள்

நிலையாமை என்பது உலகியல் வாழ்வு நிலையில்லாதது என்பதைக் குறிக்கும். திருக்குறளில் நிலையாமையை,

'நில்லாத வற்றை நிலையின என்றுணரும்

புல்லறி வாண்மை கடை'

நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவுடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும் (Parimelalhagar, 2003).

## இளமை நிலையாமை

இளமை எதையும் துடிப்போடு செய்யக் கூடியது. இளமை காமத்தை விரும்பக்கூடியது. அறவுரைகளை ஏற்காமல் விருப்ப உணர்களை விரும்பிச் செய்யக் கூடியது. இந்நிலையில் நாலடியார் இளமை நிலையாமையை எடுத்துக்கூறுவதோடு அறத்தை விரும்பி செய்யக் கூடிய வாழ்வியல் சிந்தனையையும் விதைக்கிறது.

முதுகு வளைந்து, உடல் தளர்ந்து, தலை நடுங்கி, நடத்தற்கு ஆதராவாகத் தடியை ஊன்றி விழுந்து இறக்கப்போகும் முதுமை நிலையில் உள்ள இத்தகைய ஒருத்தியிடத்தும், முதிர்ந்த அறிவற்ற காமத்தைக் கொள்ளும் மக்களுக்கு, அவள் தற்போது பிடித்திருக்கும் கையின் ஊன்றுகோல், அவளுடைய தாயின் கைக்கோலாய் இருந்தபோது, அவளுக்கு ஆடவரை வருத்தும் அழகு உருவம் இருந்திருக்கும் எனக் கூறுகிறது. இதனை,

"தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா

வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிஇலா

மர்மம்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்

அம்மனைக்கோல் ஆகிய ஞான்று"

எனும் பாடலால் அறியமுடிகிறது (Balasundaram Pillai, 1969). அழகு என்பது நிலையற்றது. சுருங்கி முதுமையில் வாடக் கூடியது என்கிறது நாலடியார். ஆட்டைப் பலியிடக் கூடியவனின் கையில் உள்ள தளிர்களைக் கண்டு ஆடு மகிழ்வதைப் போன்ற மகிழ்வு இளமையால் உண்டாகும் மகிழ்வு (நாலடி.16) என்கிறது நாலடியார். இதனை

"இழுக்கல் இயல்பிற்று இளமை பழித்தவை

சொல்லுதல் வற்றாகும் பேதமை யாண்டும்

செறுவொடு நிற்கும் சிறுமை இம்மூன்றும்

குறுகார் அறிவுடையார்"

இளமைப்பருவம் தவறு செய்வதற்கு இயல்பாக உடையது. அறிவில்லாமை என்பது அறிவில்லாமை என்பது அறிவுடையோர் விலக்கிய செயல்களைச் செய்யவல்லது. சிறுமைத் தன்மை எப்போதும் சினம் கொண்டதாகவே இருக்கும். எனவே இம்மூன்றையும் அறிவுள்ளவர் நெருங்கமாட்டார் (Punnaivanatha Mudaliar, 2007).

## அறநெறியில் செல்லுதல்

மனித சமுதாயமானது இம்மை மறுமைக் கோட்பாட்டின் அடிப்படையில் வாழ்வியல் சிந்தனைகளைக் கொண்டு தம் கோட்பாட்டினை வகுத்துச் செயல்பட்டுள்ளன. தன்னுடைய வாழ்வில் அறநெறிகளைக் கடைப்பிடித்து, தீய செயல்களை விலக்கியுள்ளன. இதனை

"மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல் ஊன்றி

இன்னாங் கெழுந்திருப் பார்"

நாலடி பாடல் இவ்வாறு கூறுகிறது (Balasundaram Pillai, 1969). அதாவது தீயவரின் நட்பை விட்டு விலகி, பாவம் நீங்க இறைவனடி சேர்ந்து அறவழியில் நடந்தால் நன்மை நாம் இருக்கும் இடம் தேடி வரும் என்கிறது.

குற்றமற்ற நல்லறிவு உடையவர்கள் முதுமை வரும் என்று உணர்ந்து இளமையிலேயே பற்றினை விட்டுவிடுவர், குற்றமுள்ளோர், இளமைக் காலத்தை அறவழியில் பயன்படுத்தாது முதுமை வந்துற்றபோது தனக்கு ஆதராவாகக் கோலையூன்றித் துன்புற்றுத் தள்ளாடுவர். ஆதலால், இளமையில் அறவழியில் செல்லாமல் சுகபோகமான வாழ்க்கையை அனுபவித்தவர்கள் முதுமையில் வருந்துவர் என்பது இப்பாடல் வழி தெளிவுபடுகிறது. இளமைக் காலத்தை வீணடிக்காமல் அறவழியில் சென்றால் நல்லது விளையும் என்கிறது நாலடியார்.

## இளமையில் துறவு மேற்கொள்ளுதல்

சமண நூலான நாலடியார் பல அறநெறிகளை வாழ்வியல் சிந்தனைகளாக எடுத்தியம்புகின்றன. "அறநெறிகள் வினைப்பயன் நம்மை அணுகாமல் வீடுபேறு அடைவதற்கு வழி வகுக்கின்றன" என்பது சமணர்களின் நம்பிக்கை (Balasundaram Pillai, 1969). இவர்கள் கூறும் அறநெறி இரத்தினத்திரயம் எனப்படும். அந்த மூன்று இரத்தினங்கள் நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியன இல்லறத்தாருக்குரிய அறவொழுக்கம் அணுவிரதம் என்றும் துறவிகளுக்குரியது மகாவிரதம் என்றும் கூறப்படுகின்றன. இன்னா செய்யாமை (அகிம்சை), வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அசுதேயம்), சிற்றின்பம் விழையாமை (பிரமசாரியம்), கவராமை (அபரிக்கிரகம்) முதலிய நற்பண்புகளை இல்லறத்தார் வரம்புக்குட்பட்டும் துறவிகள் வரம்பின்றியும் கடைப்பிடிக்க வேண்டும். வேதம், வேள்வி, வருணாசிரமக்கொள்கை என்பவற்றை இது கடிந்துரைக்கிறது என்னும் சமண அறக்கொள்கை இங்கு நோக்கத்தக்கதாகும்.

இளமையில் துறவு மேற்கொள்ளல் என்பது அறிவையும் ஞானத்தையும் தருவதோடு இப்பிறப்பறுத்து வீடுபேறு அடைந்திட செய்யும் என்பது நாலடியாரின் அறச்சிந்தனையாகும்.

"நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்

குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா

மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி

இன்னாங் கெழுந்திருப் பார்”

எனும் பாடல் குற்றம் இல்லாத அறிவையுடையவர் (Balasundaram Pillai, 1969).

‘முதுமை வரும்’ என்றெண்ணி இளமையிலேயே பற்றினை விட்டார். குற்றம் நீங்குதல் இல்லாத நிலையற்ற இளமைக் காலத்தை அறவழியில் பயன்படுத்தாது களித்தவர் முதுமையுற்று கையிலே ஆதரவாகக் கோலையூன்றித் துன்பத்துடன் எழுந்து தள்ளாடுவர் என்று கூறுகிறது.

## துறவே நன்னெறி

துறவே நன்னெறி என்று கூறுகிறது நாலடியார். இங்கே “பௌத்த அறவியலில் நால்வகை வாய்மைகள் எவ்வாறு இன்றியமையாதனவாய் விளங்குகின்றனவோ அதுபோல் சமண அறவியலில் மும்மணிகள் இன்றியமையாதனவாய் விளங்குகின்றன. அவை நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்பன பௌத்தத்தில் குறிப்பிடப்படும் அட்டாங்க மார்க்கத்திலும் இம் மும்மணிகள் இடம்பெற்றுள்ளன. நற்காட்சியினின்று நல்ஞானமடைந்து அதன் வழியிலான நல்லொழுக்கம் பாதையில் நடைபோடுதலே சமண அறவியலின் சாரம்சம். இம் மும்மணிகளின் முழுநிலை வடிவமே சமண அறவியல் எனப்படுகிறது.

வீடுபேறடைவதற்கான முயற்சியின்போது கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள், மேற்கொள்ள வேண்டிய நோன்புகள் என்பனவாகச் சில உயர் பண்புகள், ஒழுக்கநிலைகள் என்பவற்றைச் சமணம் முன்வைத்துள்ளது எனும் கருத்து சமணத்தின் துறவு மேன்மையினைக் கூறுகிறது. “சமணம் துறவு நெறியை வற்புறுத்துகிறது” எனும் கருத்தும் இதனை வலியுறுத்துகிறது. நாலடியாரும்,

“ஊக்கத்தாம் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்

தாக்கருந் துன்பங்கள் தாந்தலை வந்தக்கால்

நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்

காக்கும் திருவத் தவர்”

எனப் பாடியுள்ளது (Balasundaram Pillai, 1969). அதாவது, முயன்று தாம் மேற்கொண்ட தவங்கள் உள்ளத்தில் தளர்ச்சி ஏற்படும்படி நீக்க இயலாத துன்பங்கள் தம்மிடம் வந்தால், அத்துன்பங்களை நீங்கச் செய்து தம் தவங்களை நிலைக்கச் செய்யும் மன வன்மையுடையவரே துறவு ஒழுக்கத்தைக் காத்துக் கொள்ளும் தவமுடையவர் ஆவர் எனத் துறவின் தன்மையையும் வலிமையையும் வலியுறுத்துகிறது. மேலும்,

“மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற

ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய்

கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்

விலங்காது வீடு பெறும்”

என விளம்புகிறது (Balasundaram Pillai, 1969). மெய், வாய், கண், மூக்கு, செவி என்று பெயர்கள் பெற்றுள்ளன. ஐம்பொறிகளின் வழியாகச் செல்லுதலையுடைய பற்று உள்ளத்தால் ஏற்படும் அவாவை, தவறான வழியில் செல்லாமல் காத்து, ஒழுக்க நெறியில் நிறுத்தும் வன்மை கொண்டவரே தவறாது வீடுபேற்றை அடைவார் எனக் கூறுகிறது. இதனையே ஐம்புலன் உணர்வுகளையும் அதன் வழியே செல்லவிடாமல் அடக்குதல் வேண்டும். அவ்வாறு அடக்குபவகளை அக்குணமே அமரர் உலகத்தில் சேர்த்துவிடும்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும்.

எனும் திருவள்ளுவரின் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும் (Parimelalhagar, 2003). மனிதன் தன் விருப்பங்களை நோக்கி மனதைத் திரியவிடாமல் ஐம்புலன்களையும் அடக்கினால். அவன் எத்தகைய ஆற்றலையும் அடைய முடியும் என்பதை,

"பார்ப்பான் கத்திலே பாற்பசு ஐந்துண்டு

மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்

பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்ற திருமூலரின் பாடலும் இக்கருத்தை உணர்த்துகிறது (Manikkavasagan, 2016).

அறிவில்லாதவர் பலகாலம் துன்பத்தால் வருந்தியும் அதனால் பெறப்படும் ஒருநாள் இன்பத்தையே விரும்புவார். கல்வி கேள்விகளால் நிறைந்த சான்றோர். இங்ஙனம் இன்பம் இருப்பதை அறிந்து துன்பத்தின் மிகுதியை உணர்ந்து இல்வாழ்க்கை நெறியில் நிற்பதை நீங்கினர் என்கிறது. மேலும் இளமைப் பருவம் வீணே கழிந்தது! உடனே நோயுடன் முதுமையும் வரும். ஆதலால் துணிவு கொண்டு என்னுடன் வருகின்றாயா? என நெஞ்சைத் துறவுக்கு அழைப்பதாக,

"என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ

நன்னெறி சேர நமக்கு"

இப்பாடல் அமைந்துள்ளது (Balasundaram Pillai, 1969).

முன்னரே வீடுபேறு அடைய, மகிழ்வுடன் வாழ துறவு தேவை என நாலடியார் குறிப்பிட்டது. அதே வேளையில் உலக வாழ்வு இரவலர்க்கு வேண்டியவற்றை அளிக்கும் செயல் முடியாததாய் உள்ளது. இளமையும் தொலைவில் நீங்குவதால் காதல் மனைவியரும் விருப்பம் இல்லாதவர் ஆவர். எனவே உலக வாழ்க்கையில் விருப்புக் கொண்டு நாம் செல்வத்தால் பெருகுவோம் என்ற அவாவைக் கைவிட்டுத் துறவு நெறியில் செல்வதே பயனளிக்கும் என்றும் குறிப்பிடுகிறது. இதனை,

"ஈத லிசையா திளமைசேண் நீங்குதலால்

காத லவரும் கருத்தல்லர்- காதலித்து

ஆதும்நா மென்னு மவாவினைக் கைவிட்டுப்

போவதே போலும் பொருள்"

எனும் பாடலால் அறியமுடிகிறது (Balasundaram Pillai, 1969). அதாவது எடுத்தவருக்குக் கொடுக்க முடியாமல், மனைவியைப் பிரியும் நிலையுடைய வாழ்வில் துறவு வாழ்வே பயனுடையது என்கிறது நாலடியார். மேலும் இளமையை மகிழ்ந்து வாழ்ந்ததால் என்ன பயன்? உறவுகள் அறுபட்டன: சான்றோர்களும் நெருங்குவதைக் கைவிட்டனர். பொதுமக்களிடம் உண்டான உறவு என்ற அன்பு கட்டும் அறுந்தது. இறுதியாய் கடலில் முழுகும் மரக்கலத்தை ஒத்த துன்பமே உள்ளதாய் ஆயிற்று.

இதனை நாலடியார்,

"நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார்

அற்புத் தளையும் அவிழ்ந்தன - உட்காணாய்

வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம் வந்ததே

ஆழ்கலத்தன்னகலி" என்பதன் மூலம் துறவே இன்பம் தரும் என்கிறது (Balasundaram Pillai, 1969).

## முடிவுரை

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் ஒரு நாள் இவ்வுலகத்தை விட்டு நீங்கியே ஆக வேண்டும். இது உயிரினத்தில் தவிர்க்க முடியாத நிலை ஆகும் மாறக் கூடியது என்பதை சமணர்கள்

நன்கு உணர்ந்திருந்தனர். இதனால்தான் உடல் அழியும், இளமை நீங்கும், அழகு சிதையும் இன்பமும் செல்வமும் நிலைக்காது. எனவே நிலையில்லாத இளமைத் தன்மையை அறிந்து அதன் வழி நின்று இளமையையில் உள்ள காலங்களை நன்கு அற வழியில் பயனள்ளவாறு கழித்தல் வேண்டும். இளமைக் காலங்களில் அழகு சாதனங்களைப் பயன்படுத்துவதே சாதனைக்குரியது எனக் கருதுதல் வேண்டும். மனித வாழ்க்கையில் வசந்த காலமாகக் கருதப்படுவது இளமைப் பருவமாகும். இளமைப்பருவம் நிலையில்லாதது. வசந்தகாலமாகப் போற்றப்படுவது. ஆதலால, இளமை உன்னுடையது. அதனைப் பயன்படுத்தி பாவச்செயல்களைச் செய்யாமல் பவித்திரமான செயல்களைச் செய்தல் வேண்டும். நல்ல அறிவாளர்கள் முதுமை நிச்சயமாக வரும் என்று கருதி துறவு பூண்டனர். எனவே இளமையிலேயே சுக துக்கங்களை துறக்கப் பழகு. நல்ல அறச்செயல்களைச் செய்தல் வேண்டும். அது உனக்கு மிகவும் நல்லது. குழவிப் பருவத்திலேயே பற்றுகளை நீக்கி துறவு மேற்கொண்டு நல்ல அறச்செயல்களைச் செய்து முடித்தல் வேண்டும் என்பதை நாலடியார் இளமை நிலையாமையின் வழி விளக்குகிறது என்பதை உய்த்துணர முடிகிறது.

## References


Balasundaram Pillai, T.S., (1969) Naladiyar, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Manikkavasagan, G., (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Punnaivanatha Mudaliar, C., (2007) Thirikadugam, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Sithamparanar sami, (2003) Pathenen Keelkanaku Thamilar Valvum, Aarivu Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License